NO FAME
NO NAME
NO SELF INTEREST
ONLY GOD

ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள்
அருளாசியுடன்

# மதுரமுரளி

## தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு : 13 மார்ச் 2008 கானம் : 8

Published by
V. Sankaran
on behalf of
Guruji Sri Muralidhara
Swamigal Mission,
Chennai - 83.

## பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனம் ... | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 145 ... | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள் ... | 6 |
| 4. | திருவருட்பா தெய்வமணிமாலை - திருமுறை ... | 8 |
| 5. | பக்தர்கள் பல ரகம் ... | 10 |
| 6. | பாலகர்களுக்கு ஒரு கதை-117 ... | 12 |
| 7. | கருணை வடிவான சீதைக்கே வெற்றி ... | 14 |
| 8. | மாலே மணிவண்ணா -59 ... | 18 |
| 9. | பிருந்தாவனமும் நந்தகுமாரனும் ... | 22 |
| 10. | ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் ஸம்பாஷணைகளிலிருந்து-143 ... | 25 |
| 11. | செய்திகள் ... | 28 |

25-04-2008
**ஸ்ரீ சுந்தர ஹனுமார்
திருக்கோயில்
மஹா
கும்பாபிஷேகம்**

ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண
க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனம்

*ராகம்: குறிஞ்சி* *தாளம்: ஆதி*

1. உச்சிக் கொண்டை அணிந்தவன் ஓடி வருகின்றான் - அவன்
ஆடி வருகின்றான் - அவன் பாடி வருகின்றான்

2. தெச்சிப் பூ அணிந்தவன் ஓடி வருகின்றான் - அவன்
ஆடி வருகின்றான் - அவன் பாடி வருகின்றான்

3. பச்சிளம் பாலகனவன் ஓடி வருகின்றான் - அவன்
ஆடி வருகின்றான் - அவன் பாடி வருகின்றான்

4. சச்சிதானந்தனவன் ஓடி வருகின்றான் - அவன்
ஆடி வருகின்றான் - அவன் பாடி வருகின்றான்

5. மெச்சி அவனைப் பாடிடவே ஓடி வருகின்றான் - அவன்
ஆடி வருகின்றான் - அவன் பாடி வருகின்றான்

6. அச்சன் யான் உனக்கென்று ஓடி வருகின்றான் - அவன்
ஆடி வருகின்றான் - அவன் பாடி வருகின்றான்

7. கச்சிதமாகவே உடை அணிந்து ஓடி வருகின்றான் - அவன்
ஆடி வருகின்றான் - அவன் பாடி வருகின்றான்

8. இச்சை எனக்கு நாமம் என்று ஓடி வருகின்றான் - அவன்
ஆடி வருகின்றான் - அவன் பாடி வருகின்றான்

9. பச்சை அவன் வண்ணமென்று ஓடி வருகின்றான் - அவன்
ஆடி வருகின்றான் - அவன் பாடி வருகின்றான்

10. வாயு குருவாஸனவன் ஓடி வருகின்றான் - அவன்
ஆடி வருகின்றான் - அவன் பாடி வருகின்றான்

## மதுரமான 145

'நம்முடைய அப்பா, அம்மா வாழ்ந்த ஒரு வாழ்க்கை முறைக்கும் நாம் இப்பொழுது வாழ்ந்து வரும் வாழ்க்கை முறைக்கும் ஒரு வித்தியாசம் உள்ளது. நம்முடைய பெற்றோர்கள் வாழ்ந்த ஒரு வாழ்க்கை முறைக்கும் அவர்களுடைய பெற்றோர்கள் வாழ்ந்து வந்த ஒரு வாழ்க்கை முறைக்கும் வித்தியாசம் உள்ளது. இது காலத்தின் கட்டாயம். தவிர்க்க முடியாதது. நான் சிறுவனாக இருக்கும்பொழுது எங்களுடைய வீட்டில் Fan, Radio இதெல்லாம் கிடையாது. எங்கள் வீடு மட்டும் அல்ல. பலருடைய வீட்டில் இவை கிடையாது.

நான் ஒரு நாள் என் நண்பருடைய வீட்டிற்குச் சென்றிருந்தேன். அவர்கள் வீட்டின் சமையல் அறையில் Gas cylinder இருந்தது. Post Boxஐ (அப்பொழுதெல்லாம் அது சிவப்பாக இருக்கும்) கொண்டு வந்து ஏன் சமையலறையில் வைத்திருக்கின்றார்கள் என்று எனக்குப் புரியவே இல்லை. மாட்டு வண்டிகள், குதிரை வண்டிகள், கையால் இழுத்துச் செல்லும் ரிக்ஷாக்கள் அநேகம் இருக்கும். யாரும் அலட்டிக்கொள்ள மாட்டார்கள். ஒண்டுக் குடித்தனத்தில் காலம் தள்ளிவிடுவார்கள்.

நான் படித்த பள்ளிக்கூடத்தின் கல்வித்தரம் மிகவும் உயர்ந்தது. ஆனால், Fees எவ்வளவு தெரியுமா? வருடத்திற்கு ரூ. 16.40 பைசா. இவையெல்லாம் சொன்னால் நம்ப முடிகின்றதா? வீட்டு வாடகை மாதத்திற்கு 10 ரூ, 15 ரூ என்றிருக்கும். Car எல்லாம் ஓர் ஊரில் அபூர்வமாக ஒன்றிரண்டு பேரிடம்தான் இருக்கும். பேப்பரில் ஏதோ இடத்தில் கண்ணீர்ப் புகை என்றாலே மிகப்பெரிய செய்தி. Fridge எல்லாம் Luxary Item என்பார்கள். தன்னுடைய மகன் வீட்டில் Fridge வாங்கிவிட்டான் என்பதற்காகவே அவனிடம் பேசாமல் இருந்த தந்தையை எனக்குத் தெரியும்.

யாராவது வெளிநாட்டிற்கு அதுவும் அமெரிக்காவிற்குச் சென்றார்கள் என்றால் எல்லோரும் வாயைப் பிளப்பார்கள். எங்கேயாவது ஒரு கலப்புத் திருமணமோ, விதவைத் திருமணமோ நடந்தால் ஊரே வியந்துப் பார்க்கும். பெண்களைப் பள்ளிக் கூடத்தைத் தாண்டி, அல்லது கல்லூரியைத் தாண்டிப் படிக்க வைக்கப் பயப்படுவார்கள். ரேடியோ ஸ்டேஷன் இரவு 10 மணிக்கெல்லாம் 'ஜன கண மன' பாடிவிடும்.

கணிதமேதை ராமானுஜம், கணிதத்தின் ஆராய்ச்சிக்காக வெளிநாடு சென்றார். அவர், பிறகு இந்தியாவில் இறந்தபோது அவருக்கு ஈமச் சடங்குகளைச் செய்ய யாரும் முன்வரவில்லை. மகாத்மா காந்தி கன்னியாகுமரியில் முக்கடல் கூடும் இடத்தில் நீராடினார். அவர் பகவதியைத் தரிசனம் செய்யச் சென்றபொழுது, கோவில் நிர்வாகிகள் அனுமதி தர மறுத்துவிட்டனர். சுவாமி விவேகானந்தர், எந்த ஒரு பவதாரிணியின் சன்னதியில் தன் குருநாதருடன் இருந்து கொஞ்சிக் குலாவினாரோ, பிற்காலத்தில் அவரை அந்தக் கோவிலில் அனுமதிக்கவில்லை. இந்த மூன்று சம்பவங்களுக்கும் காரணம் அவர்கள் வெளிநாடு சென்று வந்ததே.

கல்யாணத்தில் எல்லோரும் போட்டோ எடுத்துக்கொள்ளவே பயப்படுவார்கள். ஏன் என்றால் ஆயுள் குறைந்துவிடுமாம். ஒவ்வொரு வீட்டிலும் பெண்கள் வீட்டுவிலக்குரிய பகிஷ்டா காலங்களில் ஒதுங்குவதற்கும், பிரசவத்திற்கு என்றும் தனி அறைகள் இருக்கும். கிட்டத்தட்ட நான் பார்த்த வரைக்கும் அது சற்றே ஒரு பாதாள சிறையின் மாடல் போன்று இருக்கும்.

பெண்களுக்குப் பத்து வயதிற்குள் திருமணம் நடக்கும். அதன் கையில் அழாமல் இருப்பதற்கு, பலூன், சாக்லெட் எல்லாம் கொடுப்பார்கள். ஓரிரு வருடத்தில் அவள் புருஷன் அம்மை கண்டு இறந்துவிடுவான். அந்தப் பெண் முன்பாக அமர்ந்து, 'உன் தலையில் இப்படிக் கல்லைத் தூக்கிப் போட்டுவிட்டுப் போய் விட்டானே' என்று அழுவார்கள். அன்று ஏன் சாக்லெட், பலூன், பட்டுப்பாவாடை கொடுத்தார்கள் என்றும் அதற்குக் காரணம் புரியாது. இன்று ஏன் அழுகின்றார்கள் என்றும் காரணம் புரியாது.

அதற்குப் பிறகு அதன் வாழ்க்கை முழுவதும் இருட்டறைதான். பெண்ணைப் பிடித்திருக்கிறதா என்று பார்த்துப் பார்த்து நூறு முறை கேட்பார்கள். பையனைப் பிடித்திருக்கிறதா என்று கேட்பாரே கிடையாது. இப்படி நான் எவ்வளவோ எழுதிக்கொண்டு போவேன். இதையும், இன்றைய காலகட்டத்தின் வாழ்க்கை முறையையும் நீங்கள் ஒப்பிட்டுப் பார்த்தால், பகவானை அடைவதற்கு ஒரே ஒரு வழி நாமகீர்த்தனமே என்பது புரியவரும். எவ்வளவோ விஷயங்களை மாற்றிக்கொண்டுள்ள நாம், **தேவையற்ற** சடங்கு, சம்ப்ரதாயங்களைத் துணிந்து கைவிட்டு விட்டுத் தெய்வீகத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதே என் ஆசை.

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் ஒரு நாள் சத்சங்கத்தில் கூறிய விஷயங்களைத் தங்களுடன் பகிர்ந்துகொள்கிறேன்.

(தொடரும்)

**– டாக்டர் ஆ. பாக்யநாதன்**

---

மதுரபுரி ஆஸ்ரமத்தில் வழக்கம்போல் மாலையில் விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் நடந்துகொண்டிருந்தது. 'பயக்ருத், பய நாஶன:' என்ற இடம் வந்தவுடன் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், பாராயணத்தைச் சற்று நிறுத்திவிட்டு ஒரு விளக்கம் கூறினார்கள்.

'பயத்தைக் கொடுத்து, பயத்தைப் போக்குபவன் என்று இந்த இடத்திற்குப் பொருள். இதன் உண்மைப் பொருள் என்னவென்றால் பகவான் ரமணருக்கு, தந்தையின் மரணத்தைப் பார்த்து, பயம் வந்தது. ஏன்? பகவான்தான் அந்தப் பயத்தை உண்டாக்கினான். அந்தப் பயத்தை ஞான அனுபவத்தினால் பகவானே போக்கினான். அதுபோல், புத்தர் போன்ற எண்ணற்ற மஹான்களின் வாழ்க்கையிலும் நடந்திருக்கின்றது. சம்சார வாழ்க்கையைக் கண்டு, உனக்குப் பயம் உண்டாகுமானால் அதுதான் பகவானே ஏற்படுத்துகின்ற பயம். அதற்குக் காரணம் அவனுடைய அருளே. அந்தப் பயம்தான் ஞான அனுபவத்தில் கொண்டு முடியும்' என்று கூறினார்கள்.

**- M.K. ராமானுஜம்ஜி**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

*கேள்வி : வெங்காயம், பூண்டு, இவற்றை உணவில் ஏன் சேர்த்துக்கொள்ளக் கூடாது? உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது என்று மருத்துவர்கள் கூறுகின்றார்களே!*

பதில் : பாற்கடலை, தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து கடைந்தார்கள். அமிர்த கலசத்துடன் பகவான் தன்வந்திரியாக வந்தார். அந்த அமிர்தத்தை அசுரர்கள் தூக்கிச் சென்றார்கள். பகவான், மோஹினி அவதாரம் எடுத்து, கலசத்தைத் தன் கையில் வாங்கிக்கொண்டார். அசுரர்களையும் தேவர்களையும் தனித்தனி வரிசைகளாக அமர்த்தி, அமிர்தத்தைக் கொடுக்க ஆரம்பித்தார். தேவர்களுக்கு மட்டுமே அமிர்தத்தைக் கொடுத்து அசுரர்களை ஏமாற்றி வந்தார். இதை அறிந்த ஸ்வர்பானு என்ற அசுரன் தேவர்களின் பக்கம் வந்து சூரிய சந்திரர்களின் நடுவில் வந்து அமர்ந்து, அமிர்தத்தைச் சாப்பிட ஆரம்பித்தான். மோஹினியோ கையிலிருந்த ஆப்பையினால் ஸ்வர்பானுவின் தலையில் தட்டினாள். அவன் இரண்டாக ஆனான். அவர்கள்தான் ராகுவும், கேதுவும். அப்படித் தலையில் அடித்தவுடன் அவன் சாப்பிட்ட அமிர்தம் வெளியில் வந்தது. அதிலிருந்து வந்ததுதான் வெங்காயம், பூண்டு இவைகள் எல்லாம்.

இவை உடலுக்கு நல்லது. ஆனால், இதைச் சாப்பிடுபவர்களுக்கு அசுர சுபாவமும் வளரும். அசுரசுபாவமுள்ள குழந்தைகள் பிறக்கும். ஆகவேதான், தியானம், யோகம் செய்பவர்கள் இதை சாப்பிடக்கூடாது என்பது.

*கேள்வி : நாம் உலக விஷயமாகச் சில பிரார்த்தனைகள் ஆரம்பத்தில் செய்கின்றோம். பிறகு, சிறிது நாள் கழித்து முக்தி வேண்டிப் பிரார்த்தனை செய்கின்றோம். உலக விஷயங்களான பிரார்த்தனைகளும் நிறைவேறுமா?*

பதில் : ஒரு குழந்தை விழித்துக்கொண்டிருக்கும்பொழுது பால் கேட்டு அழுதது. தாயார் பால் காய்ச்சி எடுத்து வருவதற்குள் குழந்தை தூங்கிவிட்டது. இப்பொழுது, அந்தக் குழந்தைக்குப் பால் தேவையில்லை. இருந்தாலும், அந்தத் தாயார் எப்படி அந்தக் குழந்தையை எழுப்பி, பாலைக் கொடுத்தப் பிறகுதான் மீண்டும் தூங்க வைப்பாளோ, அதுபோல்தான் இதுவும். அறியாமையில், நாம் கேட்ட பிரார்த்தனைகளை ஞானநிலையிலும்கூடப் பகவான் பூர்த்தி செய்து வைப்பான்.

***கேள்வி: ராமாவதாரத்தில் ஸ்ரீ ராமர் தன்னைத் தெய்வம் என்று கூறிக்கொள்ளவே இல்லையே! ஏன்?***

பதில்: ராமாவதாரம் நடந்தது திரேதா யுகத்தில். அந்த அவதாரத்தில் பகவான் ராமராக அவதாரம் செய்து, 'நான் மனிதன், நான் மனிதன்' என்று சொன்னாலும், எல்லோரும், ''இல்லை! இல்லை! நீ தெய்வம்!'' என்றார்கள். அதற்கு அடுத்த யுகத்தில், அதாவது, துவாபர யுகத்தில், பகவான், ஸ்ரீ க்ருஷ்ணராக வந்தபொழுது, ''நான் தெய்வம், நான் தெய்வம்'' என்றே கூறினாலும் கூட, எல்லோரும் அவரை மனிதன், மனிதன் என்று அலட்சியப்படுத்தினார்கள். இந்த யுகத்திலோ தெய்வம் நிந்திக்கப்படும்.

Sri Hari :

PRANAMS TO THE LOTUS FEET OF

**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**

Better Financial Planning lead to Best Prosperity

We, a leading financial Corporate, provide financial planning to all HNI/NRI customers regarding child education, Retirement solutions, Tax-Planning & investment with security.

For details contact :

**N.S. MAHESH BABU,** Sr. Consultant Trainer/Financial advisor
# 16, Welders Nagar, Tanjore Road, Trichy - 620 008.
email : maheshbabu49638@icicipruPartner.com
Mobile : 98941 76377 Phone : 0431-6451505

## திருவருட்பா
## தெய்வமணிமாலை - திருமுறை

*நாம்பிரமம் நமையன்றி யாம்பிரமம் வேறில்லை*
*நன்மை தீமைகளு மில்லை*
*நவில்கின்றவாகியாந் தரமிரண்டினு மொன்ற*
*நடுநின்ற தென்று வீணாள்*
*போம்பிரம நீதி கேட்போர் பிரமையாகவே*
*போதிப்பர் சாதிப்பர் தாம்*
*புன்மைநெறி கைவிடார் தம்பிரமம் வினையொன்று*
*போந்திடிற் போக விடுவார்*
*சாம்பிரமமா மிவர்கள் தாம் பிரமமெனு மறிவு*
*தாம்பு பாம்பெனு மறிவு காண்*
*சத்துவ வகண்டபரி பூரணா காரவுப*
*சாந்த சிவசிற் பிரம நீ*
*தாம்பிரிவில் சென்னையிற் கந்தகோட்டத்துள் வளர்*
*தலமோங்கு கந்தவேளே*
*தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வ மணியே!*

''ஜீவன்முக்தி, அத்வைதம், பிரும்மம் போன்ற சொற்கள் ஏகாந்தமாக வைராக்யத்துடன் கூடிய பிரும்மவிசாரிகளிடமும், பண்டிதர்களிடமும் இருந்தன. ஆனால், அந்த ஒரு வார்த்தை இன்று கொத்தவரங்காய், வெண்டைக்காய் போன்று மலிந்துவிட்டது. 'கர்மாக்களோ வேலை இல்லாதவர்களால் எழுதி வைக்கப்பட்டது, பக்தியோ மூடர்களுக்குச் சொல்லப்பட்டது, அறிவின் சிகரமான எனக்கு அத்வைதம்தான் சரி' என்று சொல்லும் பலரை இன்று பார்க்கின்றோம். ''உனக்கு என்னடா வேண்டும்?'' என்றால், ''ஒன்றும் வேண்டாம் ஸ்வாமி. எனக்கு ஜீவன்முக்திதான் வேண்டும்'' என்று சொல்லக்கூடிய பலரை இன்று பார்க்கின்றோம். இவர்களுக்கு ஜீவன் முக்தியைப் பற்றிப் படித்து ஏதோ ஆசை வந்துவிட்டது. ஆனால், உலக ஆசைகளான பெரிய வீடு, சுகமான படுக்கை, சுவையான ஆகாரம், கௌரவம் போன்றவற்றை இவர்களால் விடமுடியாது. ஆனால், ஜீவன்முக்தியிலோ ஆசை வந்துவிட்டது, என்ன செய்வது?

ஒன்றுதான் வழி. நீ எப்படி இருக்கின்றாயோ அப்படியே இரு, உனக்கு மரணத்தின்போது ஜீவன்முக்தி கிடைக்கும் என்றோ அல்லது இப்பொழுதே அப்படித்தான் நீ இருக்கின்றாய் என்றோ யாராவது சொல்லமாட்டார்களா? என்று ஆசை. இவர்களை நன்றாக புரிந்துகொண்டு ஏமாற்றுவதற்கும் பலர் உள்ளனர். தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ள நினைப்பவர்களுக்கு பிறரை ஏமாற்றி பிழைப்பு நடத்தும் ஒருவர் குரு, ஆஹா! என்ன பொருத்தம்! இவர்களைப் பற்றி அன்றே ஸ்ரீ ராமலிங்க வள்ளலார் பாடியுள்ளார்.

கந்தக்கோட்டத்தில் உள்ள முருகனைப் பாடுகையில், ஒரு பாடலில், இவர்களைப் பற்றிக் கூறும்பொழுது, ''முருகா! இவர்கள் உன்னைப் பாடமாட்டார்கள். 'நாங்கள் பிரும்மமாக ஆகிவிட்டோம்' என்பார்கள். வார்த்தை ஜாலங்களால் பிறரைக் கலங்க அடிப்பார்கள். காபி, புகையிலை, வெற்றிலைப் பாக்கு, பீடி, மூக்குப்பொடி போன்ற சிறிய விஷயங்களைக் கூட விடமுடியாது. அதுமட்டும் இல்லாமல், ஜோதிடக்காரர்களைக் கூப்பிட்டுக் கூப்பிட்டுப் பிரச்னம் பார்த்துப் பரிகாரம் செய்யும் இவர்கள், பிறருக்குப் பரிகாரம் சொல்வதுதான் ஆச்சர்யம். அதுவும், தனக்கு யாராவது மந்திரம் செய்திருப்பார்களோ என்று பயம் வந்தால், யார் காலிலும் விழுவதற்குத் தயாராக இருப்பார்கள். எந்த இழிசெயலையும் செய்வதற்குத் தயங்க மாட்டார்கள்'' என்கின்றார். வள்ளலார் இவர்களை எல்லாம் சாகின்ற பிரும்மம் என்கின்றார்.

உலகம் கயிற்றிலே தோன்றும் பாம்பு என்பார்கள். ஆனால், இவர்களோ பாம்பைக் கயிறு என்று நினைத்து அஜாக்கிரதையாக இருப்பவர்களே ஆவர்.

**- டாக்டர் ஆதிமூர்த்தி பாக்யநாதன்**

---

உடலில் உள்ள நோயின் வலி தெரியாமல் இருப்பதற்கு, வலி மறக்கும் மாத்திரைகள் உதவும். வாழ்க்கையில் ஏற்படும் துக்கங்கள் பாதிக்காமல் இருப்பதற்குத் தெய்வ வழிபாடு மட்டுமே உதவும்.

**- ஸ்ரீ ஸ்வாமிஜி**

# பக்தர்கள் பல ரகம்

கோவில் வழிபாடு என்பது நமது மதத்தில் ஒரு முக்கியமான அம்சம். பாமரர்கள் முதல் பண்டிதர்கள் வரை அனைவருக்கும் கோவிலில் உள்ள மூர்த்தியிடம் ஈடுபாடு உள்ளது. இப்படி ஓர் கோவில் வழிபாடுகளில் ஈடுபடுபவர்கள் பலவிதம். நான் கோவிலுக்கு வழிபாடு செய்யச் செல்லும்பொழுது, அங்குக் கவனித்த பல விஷயங்கள் மிகவும் ருசிகரமாக இருந்ததால் உங்களோடு பகிர்ந்துகொள்கின்றேன்.

‘கணவன் மனைவியாகக் கோவிலுக்கு வந்த ஒரு தம்பதியைக் கண்டேன். அதில், மனைவி, கணவனிடம் தாயார் உடுத்திக் கொண்டிருப்பதுபோல் அதே கலரில் பட்டுப்புடவை வேண்டும் என்று அடம்பிடிக்க ஆரம்பித்துவிட்டாள். மற்றும் சிலர், கோவிலுக்கு வந்த உடனே பிரசாதக்கடை இருக்கும் இடத்தைத்தான் தேடுவார்கள். மடப்பள்ளியில் ஏதாவது கிடைக்குமா என்று பார்ப்பார்கள். ஒன்றும் கிடைக்காவிட்டால் கோவிலுக்கு வந்ததே வீண் என்று நினைத்துக்கொண்டு போய்விடுவார்கள். மற்றும் சிலரோ, இவ்வளவு கோவில்களைப் பார்க்கவேண்டும் என்று கணக்குப் போட்டுக்கொண்டு, அவசரம் அவசரமாக வந்து பெருமாளைச் சேவித்துவிட்டுப் பறந்தடித்துக்கொண்டு ஓடுவார்கள். மற்றும் சிலரோ, கோவிலுக்குள் வந்தவுடன் இது பல்லவர் காலத்துக் கோவிலா, பாண்டியன் காலத்துக் கோவிலா என்ற கேள்வியில் ஆழ்ந்துவிடுவார்கள். மற்றும் சிலரோ, மூர்த்தி பஞ்சலோகமா? செம்பா? என்ற கவலையில் ஆழ்ந்துவிடுவார்கள்.

ஒரு சிலரோ, அந்தக் கோவிலைப்பற்றி ஏதோ ஒரு புத்தகத்தில் படித்துவிட்டு, அந்தப் பேப்பரையும் மறக்காமல் கையோடு எடுத்துக்கொண்டு வந்து, அதில் போட்டுள்ள விஷயங்களைப் பற்றி அங்கிருப்பவர்களிடம் துளைத்து எடுப்பார்கள். மற்றவர்களில் சிலரோ கால் வலிக்க வரிசையில் நின்றுவிட்டு, பெருமாளிடம் வந்தவுடன் கண்களை மூடிக்கொண்டு, எல்லாம் உள்ளேதான் இருக்கின்றது என்ற எண்ணத்துடன் சென்றுவிடுவார்கள். மற்றும்

சிலருக்குக் கோவில் கோவிலாகச் செல்வது ஒரு பிடித்த பொழுதுபோக்கு. மற்றும் சிலருக்குக் கோவிலில் அமர்ந்து வம்பு அடிப்பது என்பது பிடித்த விஷயம். சிலருக்குக் கோவில் நெல் காய வைப்பதற்கும், சமபந்தி போஜனம் போடுவதற்கும் பயன்படுகின்றது.

கோவிலுக்கு வந்தால் தனக்கு V.I.P. டிரீட்மெண்ட், மாலை, மரியாதை இவை எல்லாம் கிடைக்கும் என்றால்தான் கோவிலுக்கே வருவார்கள். மற்றும் பலர், நான் இந்தக் கோவிலுக்கு எவ்வளவு நாள் வந்துள்ளேன், கடவுளுக்கு நன்றியே கிடையாது என்று வசைபாடுபவர்களும் உண்டு. பிறர் பார்க்கும்பொழுது மட்டும் உரத்தக் குரலில் பாடி, புலம்பி, தன்னுடைய பக்தியினைப் பலருக்குக் காட்டிக்கொள்ள ஆசைப்படுபவர்களும் உண்டு. அதிகாரிகளோ, V.I.P.க்கள் Donorகள் யாராவது வருவார்களா? என்று எதிர்பார்ப்பார்கள். பூஜை செய்பவரோ, அர்ச்சனை தட்டில் தன்னை நன்றாகக் கவனிப்பவர்கள் வருவார்களா? என்று பார்ப்பார்கள். நான் மட்டும் என்ன வாழ்ந்தேனாம்! கோவிலுக்கு இவ்வளவு நாள் சென்று, இவற்றை எல்லாம்தான் என் புத்தியுள் ஏற்றிக்கொண்டுள்ளேன்!'

ஆமாம்! கோவிலில் உள்ள இறைவன் எப்படி? என்கின்றீர்களா, அவனோ, ஏழைப் பங்காளன். ஏழைகள் வரமாட்டார்களா, நாமகீர்த்தனம் செய்யக்கூடிய சாதுக்கள் வரமாட்டார்களா என்று ஏங்கிக்கொண்டு நிற்கின்றான். அதே சமயத்தில், எந்த நோக்கத்திலாவது அவனுடைய ஆலயத்திற்குள் பிரவேசித்தவர்களை அவன் கிருபை செய்யாமல், வெறும் கைகளுடன் அனுப்புவதே இல்லை.

**– குள்ள ஹரி**

---

மனது ஒரு நாள் பக்தியாக இருக்கும். ஒரு நாள், உலக சுகங்களை நினைத்து ஏங்கும். ஒரு நாள் எல்லாவற்றையும் வெறுக்கும். இந்த மனது என்ற மஹாமாயையை நாமகீர்த்தனம் ஒன்றினால்தான் சிறிது சிறிதாக வழிக்குக் கொண்டு வரமுடியும்.

**– ஸ்ரீ ஸ்வாமிஜி**

# பாலகர்களுக்கு ஒரு கதை - 117

பகவான் ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸர், ஒரு கதை சொல்லுவார். அது என்ன தெரியுமா? ஒரு சாது, காட்டின் வழியே நடந்து சென்றுகொண்டிருந்தார். அப்பொழுது, நல்ல விஷமுள்ள ஒரு பாம்பு அவர் முன்பாக வந்து படமெடுத்தது. பிறகு தன் படம் பூமியில் படும்படி விழுந்து வணங்கியது. சாதுவும் அந்தப் பாம்பை ஆசீர்வதித்தார். அந்தப் பாம்பானது சாதுவைப் பார்த்து, 'ஸ்வாமி! எனக்கு ஏதாவது உபதேசம் செய்ய வேண்டும்' என்று கேட்டுக்கொண்டது. அதற்கிணங்கி அந்தச் சாதுவும், ''இனி யாரையும் கடிக்காதே'' என்றார். அந்தப் பாம்பும், ''சரி ஸ்வாமி'' என்று சொல்லி, அதன்படியே நடந்து வரலாயிற்று.

சிலகாலம் கழித்து, அந்தச் சாது மீண்டும் அந்தக் காட்டின் வழியே வரலானார். அப்பொழுது, தன்னிடம் உபதேசம் வாங்கிய அந்தப் பாம்பு எப்படி இருக்கின்றது என்பதைப் பார்க்க விரும்பினார். அந்தப் பாம்பினாலோ தன்னுடைய பொந்திலிருந்தே வெளியே வரமுடியவில்லை. உடம்பு முழுவதும் ரணகளம், உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தது. சாது அந்தப் பாம்பின் நிலையைக் கண்டு மிகவும் வருந்தினார். அந்தப் பாம்போ, ''ஸ்வாமி! உங்கள் உபதேசத்தைக் கேட்டு அதன்படி நடந்த என் நிலையைப் பார்த்தீர்களா?'' என்று ஈனஸ்வரத்தில் கூறி அழுதது. அந்தப் பாம்பிற்கு அழுவதற்குக் கூட உடம்பில் சக்தி இல்லை, அப்பொழுது சாது அந்தப் பாம்பைப் பார்த்து, ''உன்னைக் கடிக்காதே என்றுதான் சொன்னேனே தவிர சீறாதே என்று சொல்லவில்லயே'' என்று கூறினார்.

நாம் யாருக்கும் தீமையைச் செய்யக்கூடாது. அதே சமயத்தில், கம்பீரத்தை இழக்கக்கூடாது. இதுபோலவே, மற்றொரு கதையும் உள்ளது. காட்டில் வாழ்ந்த ஓர் ஆண் சிங்கத்திற்குத் தலை முழுவதும் பேன் வந்துவிட்டது. தலையெல்லாம் அரிப்பு

தாங்கவில்லை. அதனால், தன் தலையில் உள்ள பிடரி மயிர் எல்லாவற்றையும் கத்தரித்துக்கொண்டது. ஒரு நாள் அந்தச் சிங்கம் ஒரு நகரத்தின் வீதி வழியாக நடந்து போக நேரிட்டது. அப்பொழுது, வீதியில் விளையாடிய சிறுவர்கள் எல்லாரும் அதைக் கல்லால் அடித்துத் துரத்தலானார்கள். தெருவில் இருந்த நாய்கள் எல்லாம் குரைத்துகொண்டே சிங்கத்தை விரட்டத் தொடங்கின. முதலில் கர்ஜனை போட்டுப் பார்த்தது சிங்கம். பெரியவர் முதல் சிறியவர் வரை எல்லோரும் தன்னைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிப்பதைப் பார்த்து அதற்கே வெட்கமும் தயக்கமும் வந்துவிட்டது. ஒரே ஓட்டமாக ஓடிக் காட்டிற்குள் புகுந்துகொண்டது. ஆகவே, குழந்தைகளே பணிவுடன் இருக்க வேண்டும். அதற்காக, கூழைக் கும்பிடு போட்டுக்கொண்டு தன்னுடைய கம்பீரத்தை இழக்காமல் எல்லோரிடமும் நடந்துகொள்ள வேண்டும்.

**- டாக்டர் ஆதிமூர்த்தி பாக்யநாதன்**

---

நன்றாக ஆன்மீகச் சாதனைகளில் முன்னேறியவர்களுக்கு, மனதே குருவாக ஆகி வழி நடத்தும்.

**- ஸ்ரீ ஸ்வாமிஜி**

**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**

# கருணையே வடிவான சீதைக்கே வெற்றி

‘இறைவன் நம் குற்றங்களைப் பார்ப்பதே கிடையாது. எப்படியாவது நம்மைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றுதான் பார்க்கின்றான். வீதியில் புறப்பாடு கண்டருளி, அப்படியாவது என் குழந்தை என்னைப் பார்க்க மாட்டானா, என் திருவடிக்கு வரமாட்டானா என்ற தாபம்தான் இருக்கின்றதே தவிர அவனுக்குக் கோபம் என்பது வருவதே இல்லை.

ஒருக்கால் பெருமாளுக்குக் கோபம் வந்தாலும் வரும். பிராட்டிக்கு கோபம் வருவதே இல்லை.

ராமாவதாரத்தில், வனவாசம் போகின்றார் பிரபு. அப்பொழுது மஹரிஷிகள் எல்லோரும் ராமரைச் சரணடைந்து, தம்மை அசுரர்கள் அடித்துத் துன்புறுத்துவதை சொல்லிக் கதறினர். ராமர் அம்பைத் தொடுத்து அசுரர்களை நோக்கி அடிக்கப் போகும் பொழுது, பிராட்டி வருகிறாள், ‘‘ஸ்வாமீ! சற்றுப் பொறும், நமக்கும் அசுரர்களுக்கும் என்ன சண்டை! நீங்கள் தவக்கோலம் பூண்டு ஜடாமுடி தரித்துள்ளீர்கள். கையில் ஜபமாலை வைத்துக் கொள்வதுதானே உங்களுக்கு அழகாக இருக்கும்; அதை விட்டு அம்பை என் தரிக்கிறீர்கள்; அவர்களை அடிக்காதீர்கள்’’ என்று சொல்கிறாள்.

பகவான், சீதையிடம், ‘‘இந்த மஹரிஷிகளைக் காப்பாற்றுவது தான் என் தர்மம். தர்மத்திற்காக நான் சீதே உன்னை விடுவேன், சகோதரர்களை விடுவேன், அம்மாவை விடுவேன், நாட்டை விடுவேன். ஆனால், ஒருபோதும் மஹரிஷிகளைக் கைவிட மாட்டேன்’’ என்று கூறினார். இதைச் சீதைக்குப் புரிய வைக்க எண்ணிய பகவான், சீதை மான் மீது ஆசைப்படும்போது, மான் கூடத் தானும் போவது போல் போனார்.

ராமர் அபரோக்ஷ ஞானிதானே! அவருக்கு, வந்திருப்பது பொய்மான் என்று தெரியாதா? ராவணன் சீதையை தூக்கிச் செல்லப் போகின்றான் என்று அவருக்குத் தெரியாதா? என்றால், நிச்சயம் தெரியும். அறிவுரையாலும் புரியாதது அனுபவத்தால்தான் புரியும் என்று ஸ்ரீ ராமர் நினைத்தார்போலும்! மஹரிஷிகள் எல்லோரும் இந்த அசுரர்களால் எத்தனை பாடுபட்டிருக்கிறார்கள் என்பதைப்

பிராட்டியார் புரிந்துகொண்டால் தான், தான் அசுரர்களை அடித்தது சரி என்று தன் வாயினால் சொல்வாள் என்று நினைத்தார்.

ராவணன் சீதையைத் தூக்கிக் கொண்டுபோய் அசோகவனத்தில் ராக்ஷசிகள் நடுவில் வைத்து மிரட்டுகின்றான். அப்பொழுதாவது சீதைக்குக் கோபம் வரவேண்டுமே! 'இராவணா! நீ நாசமாக போ! நீ அழிந்து போக!' என்று சொல்லுவாள் என்று எதிர்பார்த்தால், அப்பொழுதும் ஜகன்மாதா, ராவணனிடம், ''எப்படியாவது நீ என்னை திருப்பிக் கொடுத்து விடு! இல்லையென்றால் ராமர் கையால் அழிந்து விடுவாய்; தலையிருப்பதே பிறரை வணங்குவதற்குத் தான். ஒரு தலை இருந்தாலே பிறரை வணங்கமாட்டாய். உனக்குப் பத்துத்தலைகள் இருக்கின்றன. ராமனை வணங்காவிட்டாலும் பரவாயில்லை, அவனிடம் ஒரு நண்பனாகவாவது 'மித்ர**பா**வேனவா, சக்ய**பா**வேனவா!' கைபிடித்தாவது நட்பாயிரேன்; ''ஒரு Shake hand ஆவது செய்யேன்'' என்று கெஞ்சும்பொழுது, ராமரே ஆடிவிட்டார். ''இப்படி ஒரு கருணையா! ராவணன், ஒரு அசுரன், தன்னையே தூக்கிக்கொண்டுப்போய் அசோகவனத்தில் வைத்துத் துன்புறுத்தும் பொழுதும் கூட, அந்த ராவணனை அழிக்க வேண்டும் என்று புத்தியில் தோன்றவில்லை. நண்பனாகவாவது கை கொடுப்பாய்; ராமன் உன்னை அழித்து விடப்போகிறான் என்று தவிக்கிறாளே!'' அப்பொழுது ராமர் தோற்றுப் போனார். சீதாதேவிதான் ஜெயித்தாள், சமீபத்தில் சத்சங்கத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் அருளுரையில் இவற்றைக் கூறினார்கள். **– M.K. ராமானுஜம்ஜி**

---

பாகவதத்தில் நாரதரின் முற்பிறவித் தாயாரைக் காலத்தினால் தூண்டப்பட்டு, பாம்பு கடித்தது என்று கூறப்பட்டுள்ளது. கஜேந்திரன் என்ற யானையின் காலை விதியினால் தூண்டப்பட்டு, மகரேந்திரன் (முதலை) காலைப் பிடித்தான் என்று கூறப்பட்டுள்ளது. திரௌபதியைச் சபையில் கொண்டு நிறுத்தியது காலம். அவளைக் காப்பாற்றியது தெய்வம். அதனால், காலம் என்பது நம்மை இக்கட்டில் கொண்டு நிறுத்திவிடும். அப்பொழுது நாம் அதற்கு வசமாகிவிட்டால், அது நம்மை அழித்துவிடும். ஆனால், அப்பொழுது நாம் பகவானைக் கதறி அழைத்தால், பகவான் நம்மை அந்த இக்கட்டிலிருந்து காப்பாற்றிவிடுவான். அவ்வாறே கஜேந்திரனும், திரௌபதியும் காப்பாற்றப்பட்டார்கள். **– ஸ்ரீ ஸ்வாமிஜி**

# மாலே மணிவண்ணா - 59

**- மகாவித்துவான் மயிலம் வே. சிவசுப்பிரமணியன்**

ஐந்து இருள் அற நீக்கி - செவி முதலாகிய இந்திரியங்கள் ஐந்தையும் மயக்கம் அற நீக்க வேண்டும் என்கிறார் பரிபாடல் ஆசிரியர். உயிருக்கு விஷயங்களைக் கொண்டு தருவது சித்தம் ஆகும். இந்தச் சித்தத்தின் விருத்தியை நான்காகப் பகுத்துக் காண்பதும் ஒருவகையாகும். சித்தம், அகங்காரம், புத்தி, மனம் என்பவை அந்நான்கும். உயிரின் மற்றொரு பெயராகவே மனத்தை அதாவது சித்தத்தைச் சொல்வது வழக்கம். மனம் வேறு, உயிர் வேறு என்றில்லாமல் இரண்டையும் ஒன்றாகவே கருதிச் சொல்வது நூல்களில் வரும். மனதுக்கு அறிவுரை சொல்வதுபோல, மனத்தைப் பார்த்துப் பேசுவதுபோல் வருவனவெல்லாம் உயிருக்குச் சொல்வது போலவே ஆகும்.

சிந்திக்கின்ற நிலை சித்தம் - சிந்தித்த பொருளைத் தெளியா நிற்கும் நிலை அகங்காரம் - ஆராய்கின்ற நிலை புத்தி - பற்றுகின்ற நிலை - மனம் ஆகும். சிந்தித்தலும் பற்றுதலும் ஆகிய இரண்டும் சித்தம், மனம் என்று இரண்டாயினும் இரண்டாகாமல் ஒன்றாகவே அவற்றை வழங்குவதும் உள்ளதே.

ஒரு பொருளை உயிருக்குக் கொண்டு செல்வது சித்தமே. சித்தத்தின் மூலமாகத்தான் உயிர் ஒரு பொருளை நுகர்கிறது. தண்ணீர் சுத்தமாக இருக்கவேண்டுமானால் அது வரும் வழி சுத்தமாக இருக்க வேண்டும் அல்லவா? ஆற்றை அசுத்தப்படும்படி விட்டால் ஆற்றிலிருந்து எடுக்கப்படும் நீரும் அசுத்தமாகத்தானே இருக்கும். அதனால், இறைவன் எழுந்தருளுகிற கோயிலாகிய உயிர், சுத்தமாக இருக்க வேண்டுமானால் உயிருக்கு விஷயங்கள் வருகிற வழியாகிய சித்தம் அல்லது மனம் தூயதாக ஆகவேண்டும். அதனாலேயே திருவள்ளுவர்,

*''மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்து அறன்''*

என்கின்றார். எல்லா அறங்களும் மனத்தூய்மை உள்ள வழியே உண்டாகும் என்றால் மனம்-சித்தம் மாசு இல்லாமல் தூய்மை

உடையதானால்தான் உயிரும் தூய்மை உடையதாகும். உயிருக்குச் சித்தம் மூலமாக நுகரும் விஷயங்கள் வருகின்றன. சித்தமோ உட்கருவி. உட்கருவியாகிய அந்தக்கரணம் எனப்படும் சித்தம் எப்படி விஷயங்களை உயிருக்குச் செலுத்தும் என்ற ஐயம் எழலாம். ஆற்றில் தண்ணீர் வருகிறது என்றால் எங்கிருந்து வரும். மலையில் பெய்த மழை பல இடங்களில் அருவியாக வழிகிறது. அவ் அருவி நீர், பல பாதைகளாக வந்து ஆற்றை அடைகிறது. அதுபோலவே, சித்தத்தை, விஷய நுகர்ச்சியில் கொண்டு செலுத்துவனவற்றை வாயில்கள் என்று கூறுவர். இந்த வாயில்களின் மூலமாகப் புற விஷயங்கள் சித்தத்துள் நுழைந்து உயிருக்கு அனுபவம் ஆகின்றன. இதனையே திருக்குறளில்,

''பொறி வாயில் ஐந்து அவித்தான்'' என்று திருவள்ளுவர் கூறுவர். ஐந்து பொறிகள் வாயில்கள் எனப்பெறும். அவை செவி, கண், மூக்கு, வாய், மெய் என்பனவாகும். புறத்தே இருந்து ஓசை, ஒளி, நாற்றம், சுவை, ஊறு (பரிசம்) என்பனவாகிய விஷயங்களை வாங்கி உள்ளே உள்ள சித்தத்துக்குச் செலுத்துவன இவை ஐந்தும் ஆதலின் வாயில்கள் எனப் பெற்றன. இந்த வாயில்கள் மயக்கம் இல்லாமல் செயற்பட்டால்தான் நல்ல விஷயங்கள் சித்தத்துக்குச் செல்லும்.

அதனால், செவி முதலாகிய பொறிகள் ஐந்தையும் மயக்கம் இல்லாதவாறு தெளிவுடையதாகச் செய்ய வேண்டும். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற விஷயங்கள் இறை நுகர்ச்சியிலும் (தெய்வத்திடம் ஈடுபாடு கொள்ளும்போதும்) நிகழ்வன. சிற்றின்ப நுகர்ச்சியிலும் நிகழ்வன. உலகமயக்கில் ஈடுபட்டுக் காம நுகர்வில் செல்லாமல் உயர்ந்த இறை நுகர்ச்சியில் புலன்கள் நிகழுமானால் சித்தம் தெளிவுடையதாக இருக்கும். ஆகவே, பொறி வாயில்களை மயக்கமற்றதாக ஆக்கினால் அவற்றின் மூலமாகச் சித்தத்தைச் சென்றடையும் விஷயங்களும் நல்லனவாக அமையும் என்பதையே,

***''ஐந்து இருள் அற நீக்கி''***

என்கிறார். இறைவனை நோக்கி நிற்கிறபோது அருள் என்று ஆகும். உலகை நோக்கி நிற்கிறபோது 'மருள்' என்று கூறப்படும். நிலை

இல்லாத உலகமும், பொருளும் நிலை உடையது போலக் கருதப்பட்டு அவற்றை மீண்டும் மீண்டும் அனுபவித்தலே மக்கட்பிறவியின் பயன் என்று கருதப்படுதலின் ‘மயக்கம்’ என்று கூறினார். அந்த மயக்கத்திலிருந்து பொறிகள் விடுபடுதலே ‘இருள் அற நீக்குதல்’ ஆகும். இப்படி விடுபட்டு, சித்தத்தை அழகுறுத்தியவர்கள் என்பார் யாவர் அவர்களே திருமாலின் அன்பர்கள் எனப்படும் பாகவதோத்தமர்கள் ஆவார். எப்பொழும் தம் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் பொறிகளால்-வாயில்களால் இறைவனையே நுகர்கின்றவர்கள் அல்லவா?

*‘‘உண்ணும் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம்*
*கண்ணன் எம்பெருமான் என்று என்றே’’* ***(திருவாய்மொழி 6:7:1)***

என்று நம்மாழ்வார் கூறியதையும் இங்கே காணலாம். நுகர் பொருளையெல்லாம் இறைவனாகக் கருதினால் அப்பொருள்களைக் கொண்டு செலுத்தும் வாயிலாகிய பொறிகளும் பொறிகளின் மூலமாக அவற்றை வாங்கிக்கொள்ளும் சித்தமும் சித்த விகாரக் கலக்கம் ஒழிந்து பெருமானிடத்தில் ஈடுபடும் உயிரும் மயக்கமும் அழுக்கும் அற்ற தூய நன்னிலை பெறுதலில் ஐயம் ஏது?

*‘‘காக்கைச் சிறகினிலே நந்தலாலா உன்தன்*
*கருமைநிறம் தோன்றுதடா’’*

என்ற பாரதியார் பாடலும் இவ்வகையாகப் பொறிவாயில் தூய்மை அடைதலையே காட்டியது.

வாயில்களின் மூலமாகச் சென்றடைந்து விஷயங்கள் தங்கும் இடமாகிய சித்தத்தை வழிப்படுத்துமாற்றை,

*‘‘நான்கினுள் துடைத்து’’*

என்று பரிபாடல் சொல்கிறது.

நான்கின்-நான்கினால், உள்-சித்தத்தை, துடைத்து-மாசு அற்றதாக ஆக்கி எனப் பொருள் காண்க.

நான்கினால் சித்தத்தை அழுக்கற்றதாக ஆக்க வேண்டும். அந்த நான்கை இனிக் காண்போம்.

மைத்திரி, கருணை, முதிதை, இகழ்ச்சி என்னும் நான்கே அவை. இந்நான்கும் சித்தத்தை அழகு செய்வன; உயிருக்கு அழகூட்டுவன.

இவற்றை வடநூலார், 'சித்த பரிகருமம்' என்று கூறுவர். சித்தம் செல்லும் நெறிகளைத் தூய்மைப்படுத்தும் செயல் என்பது அதன் விளக்கம் ஆகம்.

காமம், வெகுளி, மயக்கம் என்பன பிறப்பு முதலியவற்றிற்குக் காரணமாதலின் அக்காம வெகுளி மயக்கங்களை முறையே நீக்குதற்கு இந்த நான்கும் உதவுவன ஆகும்.

இவற்றை உபேக்ஷை என்ற ஒன்றோடும் கூட்டி ஐந்து என்றும் இவைகள் **பா**வனைகள் என்றும் பௌத்த சமயத்தவர் கூறுவர்.

இந்த ஐந்தினாலும் காமம் வெகுளி மயக்கம் என்ற மூன்றையும் போக்கி, தம்மை ஒன்று என்ற சமாதி நிலையில் சேர்த்த நின் ஆர்வலர் என்று நித்யசூரிகளைக் குறிப்பிடுவர் பரிபாடல் ஆசிரியர்.

இனி, சித்தத்தை அழகுறுத்தும் ஐந்து **பா**வனைகள் பற்றிக் காண்போம்.

**(தொடரும்)**

---

எடுத்த வேலையைச் செய்து முடிப்பதில் அவரவர்கள் ஒவ்வொரு வழியைப் பின்பற்றுவார்கள். அவர்கள் போன வழி மட்டுமே சரி என்று ஆகிவிடாது. அதுபோல்தான், இறைவனை அடைவதற்கு மஹான்கள், ஒவ்வொரு வழியைப் பின்பற்றியிருக்கின்றார்கள்.

பாலாக இருந்தது தயிராக மாறியது எப்படி? ஏற்கனவே பாலாக இருந்து தயிராக மாறியதுடன் கலந்ததால்தானே! அதுபோல், மனிதன் மஹான்களுடன் பழகி அவனும் மஹாத்மாவாக ஆகிவிடுகின்றான். அந்த மஹாத்மாவின் துணை இல்லாமல் மற்றொரு மனிதன், மஹாத்மா ஆக முடியாது.

**- ஸ்ரீ ஸ்வாமிஜி**

# பிருந்தாவனமும் நந்தகுமாரனும்

ஸ்ரீ ஜகன்னாததாஸ் பாபாஜி தனது இளம் வயதிலேயே தன்னுடைய ஊரான வர்தமான் எனும் இடத்தை விட்டு பர்ஸானாவிற்கு வந்துவிட்டார். அங்குப் பானுகுண்டம் எனும் ஒரு குளத்தின் கரையில் வசித்து வந்தார். எப்பொழுதும் இவர் ராதாராணியின் தரிசனத்திற்கு ஏங்கியபடியே தியானத்திலிருப்பார்.

இவர் மாதுகரியில் கிடைக்கும் சிறு ரொட்டித் துண்டுகளை மட்டுமே உணவாகக்கொண்டிருந்தார். ஆனால், இவரது குடிசையில் பல பானைகளில் அரிசி, கோதுமை, பருப்பு மற்றும் நெல்லிக்காய் போன்ற பல சாமான்களைக் காணமுடியும். இவற்றை, இவர் தனக்காக ஒருபொழுதும் செலவிடமாட்டார். இவற்றை வ்ரஜத்திலுள்ள சாதுக்களுக்குத் திரவியமாகவோ அல்லது சில சமயங்களில் சமைத்தோ கொடுத்துவிடுவார்.

ஒருமுறை, பர்ஸானாவில் கொடிய பிளேக் நோய் உண்டாயிற்று. இதனால், பாபா மாதுகரிக்குச் செல்வதற்குச் சற்றுத் தயங்கினார். அவருக்குச் சாதுக்களுக்காகச் சேமித்து வைத்திருந்த உணவுப் பொருட்களையும் பயன்படுத்த மனம் வரவில்லை. எல்லாப் பொருட்களையும், இந்த இக்கட்டான காலத்தில் அவர் சாதுக்களுக்கு அளித்துவிட்டார். அவரால், வேறு எங்கும் செல்லவும் முடியவில்லை. ஏனென்றால், பர்ஸானாவை விட்டுச் சென்றுவிடும் எண்ணத்தை நினைத்தாலே அவர் மனம் தளர்வடைந்து கண்களிலிருந்து கண்ணீர் பெருகும். என்ன செய்வது என்று அறியாமல் அவர் தவித்தார். ஒவ்வொரு நாளும், ஒரு பிடி அன்னம் கூட இல்லாமல் பல நாட்கள் அவர் கழித்தார். ஆனால், ஒரு நாள் பர்ஸானாவை விட்டுச் சென்றுவிடலாம் என்ற முடிவுக்கு வரவேண்டியதாயிற்று.

தனது மூட்டை முடிச்சுகளுடன் அவர் பர்ஸானாவை விட்டு வெளியேற முற்பட்டபோது, அவர் அறிந்த ஒரு சிறிய வ்ரஜவாஸி பெண் அவரிடம் வந்து, 'பாபா, நீ எங்கே செல்கிறாய்?' என்று கேட்டாள்.

'எங்கேயோ செல்கிறேன்' என்று கண்ணீர் மல்க பாபா அந்தப் பெண்ணிடம் சொன்னார்.

'ஏன் செல்கின்றாய்?'

'ஏன் என்றா கேட்கிறாய்? இங்கு மாதுகரிக்குப் வழியே இல்லாமல் ஆகிவிட்டது. மாதுகரி இல்லாமல் நான் எப்படி வாழ்வது?' என்றார் பாபா.

'நீ என்ன கூறுகிறாய் பாபா? உனக்கு மாதுகரிக்கு பர்ஸானாவில் வழியில்லையா? உனக்காக என் தாய் தினமும் உணவு எடுத்து வைக்கின்றாளே! இன்று கூட உனக்கு மாதுகரி அளிப்பதற்கு சமையற்கட்டில் உணவு எடுத்து வைத்துள்ளாள். அதை எடுத்துக் கொள். இங்கிருந்து சென்றுவிடாதே பாபா!'' என்று கூறினாள்.

பாபாவிற்கு அதிக நாட்கள் உணவே உண்ணாததால் நன்றாகப் பசித்தது. 'இந்தச் சிறுமியின் தாய் ஏற்கனவே எனக்கு உணவு எடுத்து வைத்திருப்பதால், மாதுகரியைப் பெற்றுக்கொண்ட பிறகு சென்றுவிடலாம்' என எண்ணினார் பாபா. தனது குடிலுக்குத் திரும்பி, மூட்டை முடிச்சுகளை இறக்கி வைத்துவிட்டு அந்தப் பெண்ணின் வீட்டிற்குப் புறப்பட்டார் பாபா.

பாபாவைப் பார்த்ததும் அந்தப் பெண்ணின் தந்தை, 'பாபா! நீங்கள் சற்றே தாமதமாக வந்திருக்கிறீர்கள். இப்பொழுது மாதுகரியில் அளிப்பதற்கு வீட்டில் ஒன்றுமே இல்லை. ஏன் முன்பே வரவில்லை?'' என்று கேட்டார்.

''உன்னுடைய பெண் என்னை அழைத்ததால்தான் நான் வந்தேன். உன்னுடைய லாலி (பெண் தான்), அவள் தாய் எனக்காக உணவு எடுத்து வைத்திருப்பதாகக் கூறினாள்'' என்றார் பாபா.

'என்னுடைய பெண்ணா!' என்றார் ஆச்சர்யத்துடன் அந்த வ்ரஜவாஸி. 'அவள் இங்கு இல்லவே இல்லையே! அவள் தனது மாமனார் வீட்டிற்குச் சென்று வெகுநாட்கள் ஆகின்றனவே! தாங்கள் வேறு எந்தப் பெண்ணையோ என் பெண் என்று நினைத்துவிட்டீர்கள் என்று நினைக்கிறேன்!' என்றார்.

'இல்லவே இல்லை! எனக்கு நன்றாகத் தெரியும்! உன் பெண் தான் என்னை வந்து அழைத்தாள்!'

அந்த வ்ரஜவாஸி சிரித்தார். தனது மனைவியை நோக்கி 'உள்ளே ஏதாவது உணவு இருக்கிறதா பார். பாபாவிற்கு ஏதாவது கொடு. மிகவும் பசியாய் இருக்கின்றார்' என்று கூறினார்.

அந்தப் பெண்மணியும் சமையல் அறைக்குச் சென்றாள். சமையல் அறைக் கதவை திறந்தவுடன் அவள் அதிசயத்தில் உரக்கக் கத்தினாள். 'ஆஹா! என்ன ஆச்சர்யம்! யார் இங்கு இந்தத் தட்டு நிறைய ரொட்டி, தால் (பருப்பு), அன்னம், காய் எல்லாம் வைத்தார்கள்! எனக்கு ஒன்றுமே புரியவில்லையே!' அந்த வ்ரஜவாஸியும் அதிசயத்தில் விக்கித்து நின்றார். ஆனால், திடீரென அவருக்கு மின்னல் போல் எல்லாம் விளங்கியது. 'வந்திருந்த பெண் ராதாராணியாகத்தான் இருக்க வேண்டும்! அவளேதான் என் பெண் உருவத்தில் சென்று இந்தப் பாபாவை அழைத்து, பின் சமையற்கட்டில் உணவையும் வைத்திருக்க வேண்டும். வேறு யார் இப்படிச் செய்திருக்கக்கூடும்!'

பாபாவிற்கும் இவ்வாறே தோன்றிற்று. பாவத்தின் மிகுதியால் அவர் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது. ராதாராணியின் கருணை எனும் கடலில் அவரது மனம் நன்றியினால் மூழ்கிற்று.

அந்த வ்ரஜவாஸியின் மனைவி அந்தத் தட்டிலிருந்ததை அப்படியே பாபாவிற்கு அளித்தாள். பாபா, ரொட்டித் துண்டுகளையே மாதுகரியில் ஏற்பார். ஆனால், இப்பொழுதோ சாக்ஷாத் ராதாதேவியின் பிரசாதமாக இருப்பதால் அவர் அன்னம், பருப்பு என்று எல்லாவற்றையுமே ஏற்றுக்கொண்டார்.

பாபா அந்த வ்ரஜவாஸியினிடமிருந்து பிரியாவிடை பெற்றபோது, அந்த வ்ரஜவாஸி, 'பாபா தினமும் இங்கு மாதுகரிக்கு அவசியம் வரவேண்டும்' என்று கூறினார். பாபாவிற்குக் கீதையில் கண்ணன் கூறியதும், அதற்கு நிரூபணமாக ஒரு பக்தரின் கதையும் நினைவிற்கு வந்தது.

(தொடரும்)

# ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் ஸம்பாஷணைகளிலிருந்து - 143

*நுண்ணுருவுனையான் விண்ணுரு நண்ணிட*
*வெண்ணலையிறுமென் றருணாசலா*

அனைத்தையும் 'கட'ந்து 'உள்'ளே இருப்பவரே கடவுள். நாம் காணும் உலகிற்கு 'தூல உலகு' என்று பெயர். கண்ணால் பார்க்கப்படுவது இது. ஆயினும் ஞானிகளும் யோகிகளும் சொல்வது என்னவெனில், கண்களுக்குப் புலப்படாத சூக்ஷ்மமான, உலகங்கள் உள்ளன என்பதுதான்.

இந்தச் சூக்ஷ்ம உலகில் இருப்பதனைத்தும் அமானுஷ்யமானவை. தேவர்கள், தேவதைகளின் உலகங்கள், துர்தேவதைகள் போன்ற அனைத்து நல்லதும், கெட்டதும் இங்குத்தான் உள்ளன. இப்படி உலகங்கள் உள்ளன என்பதற்கு சான்றுகளாய்ச் சில விஷயங்கள் உள்ளன.

கலிகாலத்தில் யாகம் செய்யலாமா, கூடாதா என்ற ஒரு சாஸ்திர விசாரத்தில், கலியில், மான் எதுவரை ஓடுகிறதோ, (இருக்கிறதோ) அதுவரை யாகம் செய்யலாம் என்று உள்ளது. ஏனெனில் மான், தேவதைகளின் சக்தியை ஈர்க்கவல்லது. அதனாலேயே கண்ணன் கீதையில் மான்தோலை ஆசனமாகப் போடுவது நலம் என்கிறான். மான்தோல் போட்டுத் தியானம் செய்வோருக்குத் தேவதைகளின் அனுக்ரஹம் கிட்டுவதால், விரைவில் தியானம் கைகூடும். மேலும், இறந்த மானின் தோலில் உட்காருவதால், நாமும் ஒருநாள் மரிப்பது உறுதி என்பது சாதகனுக்கு மறவாது இருக்கும்.

யாகங்கள் பல செய்வோருக்கு இந்திர பதவி கிட்டும். இந்திரன் தேவர்களின் தலைவன். அசுரர்களுக்கு எதிரி. யாகம் பல சிரத்தையாகச் செய்வோர், இந்திரப் பதவி பெற்று, தங்களை தாக்குவரோ என எண்ணி, அசுரர்கள் யாகங்களுக்குத் தடையை உண்டு பண்ணுவர். அதுபோல், தியானம் செய்து தெய்வ அனுக்ரஹம் பெற்ற ஒரு சாதகனால், பூத, ப்ரேத, பிசாசங்களை

அடக்க முடியும். தியானம் செய்யும் சாதகன் அத்தகைய தெய்வ அனுக்ரஹத்தைப் பெற்றுவிடுவானோ என அஞ்சி இந்தத் துர்சக்திகள், தியானத்திற்கு இடையூறு செய்யும். ஆயின், தர்ப்பாசனத்தில் அமர்ந்து தியானம் செய்யும் சாதகனுக்கு, துர்தேவதைகளிடமிருந்தோ, பூத, பிரேத, பிசாசங்களிடமிருந்தோ தொந்தரவு வராது. தர்ப்பைக்கு அத்தகைய மகிமை உண்டு. அதனால்தான் கண்ணன் கீதையில், மான்தோல், தர்ப்பாசனம் போன்ற ஆசனங்களை உபயோகப்படுத்தச் சொல்கிறான்.

மேற்கண்ட நல்ல தேவதைகளும், துர்சக்திகளும் இருப்பது சூக்கும உலகில்தான். இதற்கும் சூக்குமமானவரே கடவுள். எந்தச் சாதகனின் உள்ளத்தில் ராஜசமான எண்ணங்களும், தாமசிகமான எண்ணங்களும் பூரணமாக அழிந்துவிட்டனவோ, அங்குச் சாத்வீகக் குணம் மேலோங்கி நிற்கிறது. அப்பொழுதுதான் சாதகனுக்குக் கடவுளின் தரிசனம் கிடைக்கிறது. இதையே பகவான் இராமக்ருஷ்ண பரமஹம்ஸரும் காமினி, காஞ்சனம் இரண்டும் அடிபடாத வரையில் இறைவனின் தரிசனம் ஏற்படவே ஏற்படாது என்கிறார்.

இப்படிக் கடவுள் அதிசூக்ஷ்மமானவர் என்பதையே 'நுண்ணுருவுனை' எனும் பதம் காண்பிக்கிறது. 'விண்ணுரு நண்ணிட' - விண்ணுரு என்றால் எங்கும் பரவி உள்ள பிரும்மஸ்வரூபம் என்று பொருள். எங்கும் என்றால், அனைத்திலும், யாவுமாய் தோற்றமளிக்கும் ஒன்று. இதையே, ஔவையாரும் ''அணுவிற்கணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்'' என்கிறார். அணுவிற்கணுவாய் என்றால் நுட்பத்தினுள்ளும் நுட்பமாய் இறைவனுள்ளார் எனப் பொருள். அவரில்லாத இடமே இல்லை.

ஆயின், இப்படி எங்கும் உள்ள இறைவனின் தரிசனம் நமக்கு ஏற்படாமல் இருப்பதற்குக் காரணம் மனதிற்கண் ஏற்படும் எண்ணங்களே. இதையே 'எண்ணலை' என்கிறார். 'எண்ணலை' என்பது எண்ணங்கள் அலை அலையாய் வருகின்றன என்பதை குறிக்கிறது.

அலைகள் ஒன்றன்பின் ஒன்றாய் வந்தவாறு இருக்கும். எண்ணங்களும் அப்படியே. ஒரு குளத்தில் சலனமற்று இருக்கும் நீரில் ஒரு கல்லை எறிந்தால், அதனால் ஏற்படும் சலனமானது, அலை அலையாய் விரிவடைந்து, வெளிப்புறம் நோக்கிச் செல்கிறது.

அதுபோல், எண்ணமும் ஒன்றைத் தொற்றிக்கொண்டு அடுத்ததாய் வந்துகொண்டே இருக்கும்.

சாதாரணமாய் ஒருவருடைய மனம் உலக விஷயத்தில் ஈடுபட்டு இருக்கும்பொழுது அதிலேயே லயித்து இருப்பார். அப்பொழுது அவர் மனம் என்ன எண்ணங்களை நினைத்துக் கொண்டிருக்கிறது என்பதை அவரே அறியார். மனம் சலிக்கவில்லை என்று இதனால் நினைத்துவிட முடியாது.

தியானத்தில் உட்கார்ந்து பார்த்தால் மனதிற்கண் எவ்வளவு எண்ணங்கள் எழுகின்றன என்றும், அவற்றை அடக்க முடியயிவில்லை என்றும் புரியும்.

மனதானது ஏதோவொரு தூலவஸ்துவை (உலகியல் விஷயம்) பற்றிக்கொண்டுதான் எழும். இப்படி ஒன்று எழுந்தபின், அதைப் பற்றிக்கொண்டு பிற எண்ணங்கள் தொடர்ந்து வந்தவாறே இருக்கும். இவற்றையே 'எண்ணலை', எண்ணங்கள் அலை அலையாய் வருகின்றன என இங்குக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

'எண்ணலையிருமென்று' - ''அருணாசலேஸ்வரா! இந்த எண்ணங்கள்தான் சூக்குமமான உன்னை அறிவதற்குத் தடையாய் இருக்கின்றன. அவற்றை அழித்துவிடேன்'' எனப் பிரார்த்திப்பது போல் இருக்கிறது.

அருணாசலேஸ்வரா, அப்படி நீ எண்ணங்களைப் பூரணமாய் அழித்துவிட்டால், முந்தைய பாட்டில் ''நீ நானறப்புலி நிதங்களிமயமா'' என்று குறிப்பிட்டாற்போல், இரண்டற்ற அத்வைதானந்த நிலையில் இருக்கலாமே என்று குறிப்பிடுவதுபோலும் அமைந்துள்ளது.

அப்படி ஆன்மானுபூதி ஏற்பட்ட பின்னர், கடவுளை சரியாகப் புரிந்துகொள்வோம் என வார்த்தையால் சொல்வது ஒருவகையில் பிசகு. ஏனெனில், ஆன்மானுபூதி ஏற்பட்டபின், புரிந்துகொள்வதற்கு என ஒருவர் இரார். எங்கும் நீக்கமறக் கடவுளே நிறைந்து இருக்கிறார் என்பது அனுபவத்தில் உணரப்படும் நிலை, புரிந்துகொள்வதற்காகவே ஆன்மசாக்ஷாத்காரம் என்று சொல்லப்படுகிறது. உண்மையில் சாக்ஷாத்கரிப்பவர், சாக்ஷாத்கரிக்கப்படும் பொருள், சாக்ஷாத்காரம் எனும் செயல் ஆகிய மூன்றும் அடிபட்ட நிலையே ஆன்மானுபூதி ஆகும்.

# செய்திகள்

### ஜனவரி 31-ஆம் தேதி, பிப்ரவரி 1-ஆம் தேதி - ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் சிவகாசி விஜயம்

சிவகாசியில் திரு. குமாரவேல் அவர்களது இல்லம், காரனேஷன் லித்தோ பிரஸ் விஜயம் செய்தார்கள். காரனேஷன் பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு விஜயம் செய்து பள்ளிக் குழந்தைகளுக்கு ஆசி வழங்கினார்கள். பகவான் யோகிராம் சுரத்குமார் பஜனை மண்டலியில் பிரார்த்தனை மையம் ஆரம்பித்து வைத்து, 'நாம மஹிமை' நூல் வெளியிட்டார்கள்.

பிறகு பராசக்தி காலனியில் உள்ள பிள்ளையார் திருக்கோவில், நேரு காலனியில் உள்ள பிள்ளையார் திருக்கோவில், எம்.ஜி.ஆர். காலனியில் உள்ள பிள்ளையார் திருக்கோவில், ராதாகிருஷ்ணன் காலனியில் உள்ள பிள்ளையார் திருக்கோவில் விஜயம் செய்து பக்தர்களுக்கு ஆசி வழங்கினார்கள். திருத்தங்கல் சுந்தரவேல்குச்சி பாக்டரிக்கு விஜயம் செய்தார்கள்.

திருத்தங்கலில் உள்ள சுந்தரவேல் மெட்ரிக்குலேஷன் பள்ளிக்கு விஜயம் செய்து குழந்தைகளுக்கு ஆசி வழங்கினார்கள். ஸ்ரீ வில்லிபுத்தூர் யோகிராம்சுரத்குமார் கோவிலுக்குச் சென்று ஆசி வழங்கினார்கள்.

திருமதி ஐஸ்வர்யா குமாரவேல் மற்றும் பவானி அக்கா அவர்கள் , சிவகாசியிலும் அதைச்சுற்றியுள்ள கிராமங்களிலும் பேட்டை பேட்டையாக தினமும் சென்று நாமப்பிரசாரம் செய்து வருகின்றார்கள்.

### ஜனவரி 31-ஆம் தேதி, பிப்ரவரி 1-ஆம் தேதி

இராஜபாளையம், பழையபாளையம், N.R. கிருஷ்ணமராஜா கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற அமரர் N.R. கிருஷ்ணமராஜா அவர்களின் 92வது பிறந்தநாள் விழாவில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கலந்துகொண்டு அருளுரை வழங்கினார்கள்.

### பிப்ரவரி 6-ஆம் தேதி

திண்டிவனத்தில், தமிழ்நாடு புரோகிதர்கள் சங்கம், திண்டிவனம் கிளை சார்பில் காலை 8 மணியளவில், சிவன் கோயிலில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் அருளுரை வழங்கினார்கள்.

மதியம் பாலூர் அருகில் சென்னப்பன்பாளையத்தில் வரதராஜ பெருமாள் திருக்கோயிலுக்கு விஜயம் செய்தார்கள்.

**பிப்ரவரி 9-ஆம் தேதி**

போளூர் தாலுக்கா, வெள்ளூரில், ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்மன் உடனுறை ஸ்ரீ யக்ஞேஸ்வரர் சுவாமி திருக்கோவில் அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேக வைபவத்தின் யாகசாலை பூஜையில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கலந்துகொண்டார்கள்.

**பிப்ரவரி 10-ஆம் தேதி**

சென்னை தாம்பரம் அடுத்த மணிமங்கலத்தில் அமைந்துள்ள திருஅருட்பிரகாச வள்ளலார் சேவா ஆசிரமத்தின் ஐந்தாம் ஆண்டு துவக்க விழா மற்றும் தைப்பூசப் பெருவிழாவில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கலந்துகொண்டு நண்பகல் 12 மணியளவில் அருளுரை ஆற்றினார்கள்.

**பிப்ரவரி 11-ஆம் தேதி - வஸந்த பஞ்சமி**

காலையில், மஹாரண்யம், ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் பிரதிஷ்டாதின வைபவம் கொண்டாடப்பட்டது. பெருமாளுக்குத் திருமஞ்சனம், அலங்காரம், ஆரத்திக்குப் பின் பிறகு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் தீர்த்தப்பிரசாதம் வழங்கினார்கள். மதியம் 3 மணியளவில் உத்சவர், ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் பாகவதபவனத்திற்குப் புறப்பாடு கண்டருள, பாகவத சம்பிரதாயப்படி, பத்மாவதி கல்யாண வைபவம் நடைபெற்றது.

மாலை 7 மணியளவில் நம் சத்சங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீ ஸ்ரீகாந்த் கௌண்டின்ய பாகவதர், ஸ்ரீ சட்டநாதன் பாகவதர் அவர்களின் கர்னாடக இசைக் கச்சேரி நடைபெற்றது.

**பிப்ரவரி 13-ஆம் தேதி, 14-ஆம் தேதி**

சேலம், ராமகிருஷ்ணா ரோடு, கோர்தன்தாஸ் கல்யாண மண்டபத்தில் மாலை 6.30 மணி முதல் 8.30 மணி வரை ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் அருளுரை நடைபெற்றது. மிகவும் திரளான பக்தர்கள் இதில் கலந்துகொண்டனர்.

**பிப்ரவரி 14-ஆம் தேதி**

காலை 7 மணியளவில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், சேலம் அருகில் உள்ள பெத்தநாயக்கன்பாளையம் ஸ்ரீ லக்ஷ்மிநரசிம்ம பெருமாள்

திருக்கோயிலுக்கு விஜயம் செய்து அருளுரை வழங்கினார்கள். அங்கு 1995 முதல் மஹாமந்திர கீர்த்தனம் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. பிறகு, பிள்ளைநகர் ஸ்ரீ ராமர் திருக்கோயிலுக்கு விஜயம் செய்தார்கள். கோர்தன்தாஸ் கல்யாண மண்டபத்தில் ஹரே ராம.... கூட்டுப்பிரார்த்தனையில் கலந்துக் கொண்டார்கள். இதில் 600க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் கலந்துகொண்டார்கள்.

**பிப்ரவரி 15-ஆம் தேதி**

கோயமுத்தூர், ராம் நகரில் உள்ள ஸ்ரீ கோதண்டராமஸ்வாமி திருக்கோயிலில் காலை 7 மணியளவில் நடைபெற்ற நகர சங்கீர்த்தனத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கலந்துகொண்டார்கள். பிறகு, வேதகோஷம், நாமகீர்த்தனம் முழங்க, ராஜகோபுரத்தைத் திறந்து வைத்தார்கள். பிறகு, ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் அருளுரை நடைபெற்றது.

**பிப்ரவரி 16-ஆம் தேதி**

சென்னை, தி.நகர், வாணிமஹாலில், சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா சார்பில் பள்ளி மாணவ மாணவியருக்காக ''ஹரே ராம...'' மஹாமந்திர நாமகீர்த்தன கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்றது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் இதில் கலந்து கொண்டனர்.

**பிப்ரவரி 3-ஆம் தேதி, 17-ஆம் தேதி**

ஏகாதசியை முன்னிட்டு மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஸ்ரீ மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ பிரேமிகவரதனுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் திருமஞ்சனம், ஆராதனை நிகழ்த்தினார்கள்.

**பிப்ரவரி 18-ஆம் தேதி முதல் 24-ஆம் தேதி வரை**

சென்னை, கே.கே.நகர், பாரதிதாசன் குடியிருப்பில் அமைந்துள்ள அருள்மிகு புவனேஸ்வரி அம்மன் திருக்கோயில் மஹாமண்டபத்தில் திருஅருள்நெறி நற்பணி மன்றம் சார்பில் இரவு 7 மணி முதல் 9 மணி வரை, ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின், ''பக்த விஜயம்'' ஆன்மீகச் சொற்பொழிவு நடைபெற்றது. இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். இத்திருக்கோயிலில் ஒவ்வொரு சனிக்கிழமைதோறும் மாலையில் ''ஹரே ராம'' நாமகீர்த்தனம் நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.

## புதிய வெளியீடுகள்

**நூல்கள் :**

1. இனியவை நூறு
2. துருவன் என்னும் பக்தி நக்ஷத்திரம்
3. ஸ்ரீமத் பாகவதம் - ஒரு அறிமுகம்
4. ஸ்ரீமத் பாகவதம் உதித்த கதை
5. பூபதேவர்
6. துளஸீ தளங்கள் (பாகம் - 1)
7. இதயத்துடன் ஓர் இதமான வருடல்
8. Simple Questions & Simple Answers
9. நூற்றுக்கு நூறு

**ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகள் (தமிழில்)**
**Cassettes, Audio CDs, VCDs**

| | |
|---|---|
| 1. ஸந்த் பானுதாஸர் | Audio CD |
| 2. ஸ்ரீ பகவன் நாம போதேந்திராள் | Audio CD |
| 3. மஹாமந்திர கூட்டுப் பிரார்த்தனை 2008 | DVD |
| 4. ஆண்டாள் கல்யாணம் (புதியது) | Audio CD |
| 5. ஸந்த் துக்காராம் (புதியது) | Audio CD |
| 6. துளஸீ தளங்கள் | Audio CD |

**கீர்த்தனங்கள் :**

| | |
|---|---|
| 1. ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் அருளிய **'கலிதர்ம உந்தியார்'** | Cassette, Audio CD |
| 2. **மஹாமந்திர கீர்த்தனம்** -ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் மதுரமான குரலில் | Cassette, Audio CD |
| 3. **பஞ்ச கீதங்கள்** | Cassette, Audio CD |

**ENGLISH LECTURES**

| | |
|---|---|
| 1. From Goodness to Godliness through Mahamantra Kirtan | DVD, Audio CD |
| 2. H.H. Sri Sri Muralidhara Swamiji's 'Kali Dharma Undhiyar' (Lecture in English) by Dr. A. Bhagyanathan (Live Recording) | MP3, Audio CD |

***Contact :***

Ph : 044-24895875
For queries regarding, Madhuramurali, Books, Audio tapes & CDs kindly send e-mail to "publications@madhuramurali.org"

## ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் நிகழ்ச்சி நிரல்

| தேதி/நேரம் | நிகழ்ச்சி நிரல் |
|---|---|
| 01-03-2008<br>6.30 p.m. | அருளுரை,<br>நாமகீர்த்தன கூட்டுப் பிரார்த்தனை<br>இடம் : பாண்டுரங்கன் கோயில்<br>கல்மண்டபம் தெரு எதிரில், ஆற்காடு |
| 02-03-2008<br>5.30 - 9.00 p.m. | அருளுரை,<br>மஹாமந்திர கூட்டுப் பிரார்த்தனை,<br>இடம் : சந்தை மைதானம்<br>இராணிப்பேட்டை |
| 03-03-2008 | ஏகாதசி<br>இடம் : மதுரபுரி ஆஸ்ரமம் |
| 16-03-2008 | மஹாமந்திர கூட்டுப்பிரார்த்தனை<br>ராமர் கோவில், ஆம்பூர் |
| 20-03-2008 முதல்<br>27-03-2008 வரை | ஸ்ரீமத் பாகவத சப்தாஹம்<br>இடம் : அத்யாத்மிக ஹால், குருவாயூர் |
| 29-03-2008<br>30-03-2008 | தர்மபுரி |

*ஸ்ரீ ஹரி :*

**ஸ்ரீ சுந்தர ஹனுமார் திருக்கோயில் -**
**நூதன அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம்**

இடம் : ஸ்ரீ வேத வியாச புராண பாடசாலை வளாகம்
கல்கரே, ராமமூர்த்தி நகர், NRI லே அவுட், பெங்களூர்
தேதி :
25-04-2008

**மங்களானி பவந்து**